

படம் : Associated Press

# 13 ஆவது சீர்த்திருத்தம்

## இந்திய வெளியுறவு அமைச்சரின் கருத்தும் தமிழ் சிங்கள பத்திரிகைகளின் முன் பக்கமும்

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனவரி 16ஆம் திகதி 2012 இலங்கை வந்திருந்தார். இலங்கையில் ஏற்பட்டுக்கொண்டிருந்த முக்கிய அரசியல் நகர்வு காலப்பகுதியிலேயே இந்திய வெளியுறவு அமைச்சரின் பயணம் இடம்பெற்றிருந்தது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டுக்கான காரணங்களை இணங்காணல், ஆயுதப் போராட்டம் ஏற்பட்டதற்கான காரணம், யுத்த நிறுத்த ஒப்பந்த காலப்பகுதியிலிருந்து 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடையும் வரை மக்களுக்கு நேர்ந்த அவலங்கள் தொடர்பாக கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஓரளவாவது கலந்துரையாடப்பட்டு வரும் நிலையிலேயே கிருஷ்ணா வருகைதந்துள்ளார். அத்துடன், இந்த அறிக்கை தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தங்களது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி 100இற்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்றையும் இந்தக் காலப்பகுதியிலேயே வெளியிட்டிருந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா ஆகியோருக்கிடையில் இடம்பெறவிருக்கும் பேச்சு தொடர்பாக ஏற்கனவே பல தகவல்கள் வெளிவந்தபோதிலும் உத்தியோகபூர்வமாக வாசகர்களுக்கு 2012ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதியே

காணக்கூடியதாக இருந்தது. இவ்விருவருக்கும் இடையில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா 2012ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதி கொழும்பு வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடாத்தியிருந்தார். முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் செய்தியை வழமைப்போன்றே இலங்கையின் பிரதான தமிழ், சிங்கள பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

இந்த செய்தியாளர் சந்திப்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணா 13ஆவது சீர்த்திருத்தம் தொடர்பாக தெரிவித்த விடயத்தை பத்திரிகைகள் தங்களது முன்பக்கங்களில் எவ்வாறு அறிக்கையிட்டுள்ளன என்பது குறித்தே இம்முறை ஊடக நோக்கில் கண்காணிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், ஜனவரி 18ஆம் திகதி தினசரி தமிழ், சிங்கள பத்திரிகைகளின் முன்பக்க அறிக்கையிடலுக்கு முக்கியத்துவம் அளித்து நோக்கப்பட்டுள்ளது.

## தனியார் சிங்கள் பத்திரிகைகள்

### லக்பிம




13ஆவது சீர்த்திருத்தம் தொடர்பாக இலங்கை அரசு புதிதாக கொண்டுள்ள நிலைப்பாட்டை இந்திய வெளியுறவு அமைச்சரின் மூல ஆதாரத்துடன் தினசரி லக்பிம பத்திரிகை பிரதான தலைப்புச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. தனியார் சிங்கள பத்திரிகைகளில் லக்பிம பத்திரிகை மாத்திரமே இது தொடர்பாக பிரதான தலைப்புச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியின் தலைப்பை கீழ்கண்டவாறு காணலாம்.

“தமிழர் பிரச்சினைக்குத் தீர்வான 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்ல இலங்கை அரசு தயார்; இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு”

லக்பிம பிரதான தலைப்புச் செய்தியில் வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்துள்ள முக்கிய கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- இலங்கை அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பொருத்தமான அரசியல் தீர்வொன்றை முன்வைப்பது முக்கியமானதாகும்.
- 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்ல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராக உள்ளார்.
- ஜனாதபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது அதிகாரபரவலாக்கலை நோக்கி முன்னகர்ந்து செல்ல தமது அரசு தயாராக உள்ளது என தெரிவித்தார்.
- கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் முக்கிய பரிந்துரைகள் காணப்படுகின்றன. இந்த பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சிறந்த வாய்ப்பொன்று கிடைத்துள்ளது.
- சிறந்ததொரு தீர்வை நோக்கி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கை அரசு தொடர்ந்து பேச்சு நடத்துவது அவசியமானதாகும்.

### லங்காதீப

இந்திய வெளியுறவு அமைச்சர் செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக தினசரி லங்காதீப பத்திரிகை முன்பக்கத்தில் செய்தியொன்றை (பிரதான தலைப்புச் செய்தியல்ல) வெளியிட்டுள்ளது. இவ்வாறு அந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

“13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லக்கூடிய வகையில் தீர்வு; ஜனாதிபதி உறுதியளித்தார் என இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு”

13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ


දහතුන් වැනි සංශෝධනයෙන් එහා යන දේශපාලන විසඳුමක්

ජනපති පොරොන්දු වීයැයි ඉන්දීය විදේශ ඇමැති කියයි

வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணாவுக்கு உறுதியளித்துள்ளார் என லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. லக்பிம வெளியிட்டுள்ள செய்தியில் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்ல 'தயார்' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ் மக்களுக்கு 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு வழங்க தான் கடுமையாக உழைப்பார் என ஜனாதிபதி தன்னிடம் உறுதியளித்ததாக வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார் என லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது. லக்பிம பத்திரிகையின் பிரதான தலைப்புச் செய்தியில் உள்ளடக்கப்படாத - வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்துக்களை லங்காதீப வெளியிட்டுள்ளது. அவை,

- யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எந்தவகையில் இந்தியா உதவியதோ அதேபோல் நிரந்தர தீர்வொன்றை முன்வைக்கவேண்டிய காலம் வந்துள்ளது.
- இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு தீர்வொன்றை வழங்க எடுக்கும் நடவடிக்கைகளை இந்தியா மிக உன்னிப்பாக அவதானிக்கிறது.

- தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்தின் மூலம் தீர்வு வழங்கவுள்ளதாக இலங்கை அரசு பல தடவைகள் தெரிவித்துள்ளது.
- இலங்கை அரசு மற்றும் தமிழ் தேசிக் கூட்டமைப்பு இடையே இடம்பெறும் பேச்சுவார்த்தையின் இறுதியில் எட்டப்படும் முடிவை தெரிவுக் குழு மூலம் விவாதித்து சிறந்த முறையில் தீர்வொன்று எடுக்கப்படும் என நம்புகிறோம்.

## திவய்ன


'13' සම්පූර්ණයෙන් බලගන්වන්න සූදානම් යැයි ජනපති කීවා

ඉන්දීය විදේශ ඇමැති කියයි

தினசரி திவய்ன பத்திரிகையும் வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்து தொடர்பாக முன்பக்க செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. அதன் தலைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

"13ஆவது சீர்த்திருத்தத்தை பலப்படுத்த ஜனாதிபதி தயார்; இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு"

"தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க அரசியல் தீர்வு அவசியமானதாகும். 13ஆவது திருத்தத்தைக் கொண்டு அதிகாரபரவலாக்கல் மேற்கொள்ள முடியும்" என வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார் என திவய்ன செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனவரி 17ஆம் திகதி பகல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா இடையே 90 நிமிடங்கள் தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்குவது தொடர்பாக பேச்சு இடம்பெற்றது என திவய்ன பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## தனியார் தமிழ் பத்திரிகைகள்

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்திய வெளியுறவு அமைச்சர் 13ஆவது சீர்த்திருத்தம் தொடர்பாக தெரிவித்த கருத்தை சுடர் ஒளி பத்திரிகை பிரதான தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது. "13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்ல தயார்; அமைச்சர் கிருஷ்ணாவிடம் ஜனாதிபதி உறுதி" என்ற தலைப்பில் சுடர் ஒளி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. செய்தியில் வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்துள்ள முக்கிய கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- இலங்கை அரசு மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு இடையே இடம்பெறும் பேச்சில் எட்டப்படும் தீர்மானங்களை நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் சமர்ப்பித்து இனப்பிரச்சினைக்கு சிறந்தொரு தீர்வை முன்வைக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.
- கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை


13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லத் தயார்!

அமுல்படுத்துவதன் மூலம் அரசு மேற்கொண்டுவரும் நல்லிணக்க முயற்சிகளுக்கு சிறந்ததொரு உந்துதலாக அமையும்.

- வீரகேசரி மற்றும் தினக்குரல் பத்திகைகள் வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்தை பிரதான தலைப்புச் செய்திகளாக வெளியிட்டுள்ளன. வீரகேசரி பத்திரிகை முன்பக்கத்தில் இரண்டு வர்ண புகைப்படங்களை வெளியிட்டுள்ளது. அத்துடன், செய்தியின் தொடர்ச்சிக்கும் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது.
- 13ஆவது சீர்த்திருத்தம் தொடர்பாக கிருஷ்ணா தெரிவித்த கருத்தை தினக்குரல் பத்திரிகை பிரதான தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவது, மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தீர்வு காணல், அபிவிருத்தி, வடக்கு வீடமைப்புத் திட்டம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியன குறித்து வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துக்கள் பிரதான தலைப்புச் செய்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## அரச பத்திரிகைகள்

### தினமின

தினமின பத்திரிகை ஜனவரி 18ஆம் திகதி வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்தை பிரதான தலைப்புச் செய்தியாகவே வெளியிட்டுள்ளது. முன் பக்கத்தில் உள்ள இந்தச் செய்தியில் வெளியுறவு அமைச்சர் 13ஆவது திருத்தம்


The Dinamina

ඉන්දු-ශ්‍රී ලංකා සබඳතා ශක්තිමත්

රජය-TNA සාකච්ඡා හොඳ ප්‍රවේශයක්

ධීවර ගැටලුවට සාකච්ඡාමය විසඳුම්

උගත් පාඩම් කොමිසමේ නිර්දේශ කඩිනමින් ක්‍රියාවට නංවන්න

ඉන්දීය විදේශ ලේකම් මාධ්‍ය හමුවේ දී කියයි

தொடர்பாக தெரிவித்த எதுவித கருத்தும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பிரதான தலைப்புச் செய்தியில் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்த பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்துக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- இந்திய, இலங்கை அரசு இடையிலான உறவு பலப்படுத்தவேண்டும்.
- அரசு மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இடையில் இடம்பெறும் பேச்சு வரவேற்கத்தக்கது.
- மீனவர் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காணப்படவேண்டும்.

அத்துடன், இந்தச் செய்தியில் வர்ணப் புகைப்படமொன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணாவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவேற்கும் காட்சியே இந்தப் புகைப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. செய்தியின் தலைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

"இலங்கை - இந்திய இடையிலான உறவு பலம் வாய்ந்தது; அரசு - தமிழ் தேசியக் கூட்டமைப்பு இடையேயான பேச்சு வரவேற்கத்தக்கது; மீனவர் பிரச்சினையை பேச்சு மூலமே தீர்க்கவேண்டும்; நல்லிணக்க ஆணைக்குவின் பரிந்துரைகளை விரைவில் அமுல்படுத்தவேண்டும்: இந்திய வெளியுறவு செயலாளர் செய்தியாளர் மாநாட்டின்போது தெரிவிப்பு"

இந்திய வெளியுறவு அமைச்சருக்குப் பதிலாக 'இந்திய வெளியுறவுச் செயலாளர்' என செய்தியின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், செய்தியினுள் 'இந்திய வெளியுறவு அமைச்சர்' எஸ். எம். கிருஷ்ணா என குறிப்பிடப்பட்டுள்ளது.

செய்தியாளர் மாநாட்டின்போது 13ஆவது திருத்தம் தொடர்பாக வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்தொன்றை ஒரு வாக்கியத்தில் தினமின வெளியிட்டுள்ளது. இந்த வசனமும் செய்தியின் தொடர்ச்சியான 4ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வசனம் செய்தியின் கடைசிப் பந்திக்கு முதல் பந்தியில் வெளியிடப்பட்டிருந்தது இங்கு விசேடமாக குறிப்பிடத்தக்கது. அது தொடர்பான செய்தி கீழ் தரப்பட்டுள்ளது.

“ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டதாக தெரிவித்த வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா, “13ஆவது அரசியலமைப்பு சீர்த்திருத்தத்திற்கு மேலதிகமாக செல்லக்கூடிய சீர்த்திருத்தத்திற்கு பதிலாகவும்” என தெரிவித்தார்.

பத்திரிகைகளில் வெளிவந்த ஏனைய செய்திகளுடன் ஒப்பிடுகையில் இந்தச் செய்தி தெளிவான விளக்கத்தை தரக்கூடிய வகையில் அமைந்திருக்கவில்லை. “13ஆவது அரசியலமைப்பு சீர்த்திருத்தத்திற்கு மேலதிகமாக செல்லக்கூடிய சீர்த்திருத்தத்திற்கு பதிலாக” என்ற வசனத்தில் எதுவித விளக்கத்தையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனைய பத்திரிகைகள் “13ஆவது திருத்தத்துக்கு அப்பால், 13ஆவது திருத்தத்தை பலப்படுத்த” என்ற வசனங்களே பயன்படுத்தப்பட்டிருந்தன.

## தினகரன்


13வது திருத்தத்திற்கும் மேலதிகமாக தீர்வை வழங்க தயாரென ஜனாதிபதி தெரிவிப்பு

ஜனாதிபதி தெரிவித்த உறுதிமொழிக்கு கிருஷ்ணா பாராட்டு

- இலங்கை - இந்தியா 5 ஒப்பந்தங்கள் கைச்சாத்து
- நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைக்கு இந்தியா வரவேற்பு
- இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தெரிவுக்குழு சிறந்த மேடை

தீர்வை வழங்க பேச்சு நடத்தி சிறந்ததொரு முடிவை காண தயார் என தன்னிடம் (இந்திய வெளியுறவு அமைச்சர்) ஜனாதிபதி தெரிவித்ததாக கிருஷ்ணா குறிப்பிட்டு-ள்ளார்.

இதற்கு மேலதிகமாக பிரதான தலைப்புச் செய்தியில் முக்கிய மூன்று விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை,

- இலங்கை, இந்தியா இடையே 6 ஒப்பந்தங்கள் கைச்சாத்து.
- நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு இந்தியா வரவேற்பு
- இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தெரிவிக்குழு சிறந்த மேடை

மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய மூன்று தனியார் தமிழ் பத்திரிகைகளில் “13ஆவது திருத்தத்துக்கு அப்பால்” என்ற பதமே பயன்படுத்தப்பட்ட போதும் அரச தினகரன் பத்திரிகையில் “13ஆவது திருத்தத்திற்கும் மேலதிகமாக (கொஞ்சம் அப்பால் என்ற அர்த்தத்தைத் தருகிறது) தீர்வை வழங்க தயாரென ஜனாதிபதி தெரிவிப்பு என தலைப்பிடப்பட்டுள்ளது. 13ஆவது திருத்தத்திற்கும் மேதிகமாக

## விசேட குறிப்பு


ඉන්දීය විදේශ ලේකම් මාධ්‍ය හමුවේ දී කියයි

### அமைச்சரை செயலாளராக்கிய தினமின

பத்திரிகைக்கோ அல்லது ஏதாவதொரு ஊடகத்துக்கு தவறு நேரக்கூடும். ஆனால், ஊடக ஒழுக்கத்தின் படி அடுத்த வெளியீட்டில் அதற்கான திருத்தம் ஒன்றை பிரசுரிக்கவேண்டும். மேற் குறிப்பிட்டுள்ளது போன்று சிங்கள அரச பத்திரிகையான தினமின இந்திய வெளியுறவு அமைச்சரை இந்திய வெளியுறவு செயலாளர் என பிழையாக குறிப்பிட்டுள்ளது. இயந்திரக் கோளாறினாலோ அல்லது ஏனைய ஏதாவது பிரச்சினையாலோ இந்தப் பிழை நேரிட்டிருந்தால் அடுத்த இதழில் அதனை திருத்தியிருக்கவேண்டும். ஆனால், இந்தத் திருத்தத்தை 2012ஆம் ஆண்டு ஜனவரி 19, 20, 21 ஆம் திகதி வரை தினமின பத்திரிகை மேற்கொண்டிருக்கவில்லை.

# ஊடகத்தின் கடமைகள் மற்றும் அபிலாஷைகள்

இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் உருவாக்கப்பட்டு இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊடக ஒழுக்கநெறிக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள சரியான செய்தி அறிக்கையிடுதல், புலனாய்வு செய்தல், ஊடகவியலாளர்களில் சமூக பொறுப்பு, தகவல் அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் மக்களின் நலன் ஆகிய ஊடக தொழில்துறை தர்மங்களைக் கொண்ட ஒரு தொகுதியை கீழே தந்துள்ளோம்.

**1. முன்னுரை**

"பிழையற்ற தன்மை, தொழில் நேர்மை, பொது நலனுக்காக புலனாய்வு செய்தல் ஆகிய பத்திரிகைத் தொழிலின் தலை சிறந்த பண்பாடுகளைப் பேணுவதற்காகப் பத்திரிகைகள் சளைக்காது முயற்சியெடுத்துப் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிராகச் சதிசெய்யும் வர்த்தகச் சார்பு அல்லது குறுகிய நோக்கம் ஆகியவற்றினால் விலங்கிடப்படாமல் இருக்கவேண்டும். பத்திரிகைகளும் ஊடகவியலாளர்களும் சுதந்திரமாகத் தம் சொந்தக் கருத்துக்களைக் கொண்டிருக்கவும் தமது திடமான கருத்துக்களை தாராளமாக வெளியிடக்கூடிய சுதந்திரத்தையும், அவர்கள் ஏனையவர்களின் கருத்துக்களுக்கு உரிய கவனம் செலுத்தி தமது சமூகப் பொறுப்பினை பிரதிபலிக்கவும் முயற்சி எடுக்கவேண்டும்.

இந்த ஊடக தொழிற்துறை தர்மங்கள் தனிநபர் உரிமைகளைப் பாதுகாத்து பொதுமக்கள் செய்திகளை அறிந்துகொள்ளும் உரிமையைத் தாங்கி நிற்கிறது. அது எழுத்தில் மட்டுமல்லாது உட்கருத்திலும் மதிக்கப்படவேண்டும். அதாவது, தனிநபர் உரிமைகள் தொடர்பில் அதன் ஈடுபாட்டினை விட்டுக்கொடுக்கும் குறுகிய விவாதத்தில் அல்லது பொதுநலன் பற்றிப் பிரசுரிப்பதை தடுக்கும் விதத்தில் விரிவாகவோ அதற்கு அர்த்தம் கற்பிக்கலாகாது."

**2. உண்மையான செய்தி அறிக்கையிடல்**

2.1 செய்திகள் மற்றும் படங்களைச் சரியாகவும் திரிபுபடுத்தல் இன்றியும் அறிவிக்க எல்லா ஊடகங்களும் சகலவிதத்திலும் நியாயமான விதத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

2.2 பிரசுரிப்பதற்கு முன் செய்திகள் சரியானவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சகல செய்தி ஆசிரியர்களும் தனிப்படையான ஊடகவியலாளர்களும் நியாயமான வகையில் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

2.3 செய்தி ஆசிரியர்கள், அவர்களது பணியாற் தொகுதியினர், புறப்பங்களிப்பாளர்கள் ஆகியோர் தாங்கள் அறிந்தவரை பொய்யானது அல்லது பிழையானது என நம்பக்கூடிய வகையில் உள்ள எந்தவொரு விடயத்தையும் ஆமோதிக்கும் விதத்தில் அறிக்கைகளை பிரசுரிக்க வேண்டாம்.

2.4 பொதுநலன் கருதி புலனாய்வு ஊடக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வெளியீடுகள் ஆர்வமூட்டப்படுகின்றன.

**3. பிழை திருத்தங்களும் மன்னிப்புக் கோரலும்**

3.1 பொருளடக்கத்தைப் பொருத்தமட்டில் செய்தி அறிக்கையொன்று பிழையானது என்பதைச் செய்தி ஆசிரியர்கள் இனங்காணும் சந்தர்ப்பத்தில் பிழை திருத்தம் அல்லது மன்னிப்புக் கோரல் பாதிப்புக்கு இலக்காகிய கட்சியினரின் விருப்பத்திற்கு முரணாயிராதபட்சம் பொருந்தும் வகையில் மன்னிப்புக் கோரலுடன் உரிய முக்கியத்துவம் வழங்கி அதனை உடனே திருத்த வேண்டும்.

"ஊடக நோக்கு" கண்காணிப்பு அறிக்கை தொடர்பான உங்களுடைய கருத்துக்கள், விமர்சனங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

மின்னஞ்சல் : media@cpalanka.org
தொ.இல : 011-2375239>
011-2375012
ஃபெக்ஸ் : 011-2375239

இணையதளத்தினுள் நுழையுங்கள்/ கலந்துரையாடுங்கள்/ எழுதுங்கள்

www.vikalpa.org
www.youtube.com/vikalpasl
www.flickr.com/photos/vikalpasl

email - info@vikalpa.org
Editor - Sampath Samarakoon
sampath@cpalanka.org, editor@vikalpa.org